**தேசிய கைப்பணிகள் சபை - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தேசிய கைப்பணிகள் சபையின் (''சபை'') 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நிய-ாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- சபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- சபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் 48 ஆம் பிரிவின் பிரகாரம் கடந்த ஆண்டின் சரிசெய்தல்கள் ரூபா 13,664,002 பிற்போட்ட ரீதியில் சீராக்கப்பட்டமையால் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சரிசெய்யப்பட்ட பெறுமதியை காண்பிக்கின்ற ஒப்பீட்டு ரீதியான பெறுமதி மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டில் சரிசெய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சட்ட ரீதியான உரித்து மன்றத்திற்கு இல்லாத 02 வாகனங்களை பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு செலவினங்களுக்காக செய்யப்பட்ட ரூபா 2,345,300 ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்தது. | இரண்டு வாகனங்களுக்கும் உரிய மூலதன பெறுமதியான ரூபா 2,345,300 சொத்துக் கணக்கிலிருந்து அகற்றப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | செலவினங்களை சரியாக இனங்கண்டு நிதிக் கூற்றுக்களில் கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) கைப்பணிகள் சபைக்கு சொந்தமான பயிற்சி கைப்பணி நிலையங்களின் வருமானம், செலவினங்கள் மற்றும் வங்கி மீதிகள் தொடர்பான தரவுகள் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படாதிருந்ததுடன், 83 நிலையங்களின் வங்கி மீதி பெறுமதி ரூபா 2,861,581 வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | கைப்பணி பயிற்சி நிலையங்களில் கொடுக்கல் வாங்கல்களை இலகுபடுத்துவதற்காக மாத்திரம் கணக்குகள் திறக்கப்பட்டிருந்ததுடன், வருமானம், செலவினங்கள் மற்றும் வங்கி மீதியில் உள்ளடக்கப்பட்ட அறிக்கையொன்று நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சகல வங்கி கணக்கு விபரங்களும் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (இ) 2008 ஆம் ஆண்டில் அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் இலங்கை கைப் பணிகள் சபைக்குரியதாக காணப்பட்ட ரூபா 46,298,422 | உரிய சொத்துக்கள் நிதிக் கூற்றுக்களில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக் கூற்றுக்களில் சீராக்கங்களை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சொத்துக்கள் தேசிய கைப்பணிகள் சபைக்கு கையேற்கப்பட்டமையால் அப்பெறுமதி இலங்கை கைப்பணிகள் சபையின் கணக்குகளில் அகற்றப்பட்ட போதும் அப்பெறுமதி சபையின் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சுச் சொந்தமான 02 வாகனங்களின் மீள்மதிப்பீட்டு பெறுமதி ரூபா 2,800,000 கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டில் சரிசெய்யப்படும். | -மேற்படி- |
| (உ) | கைத்தொழில் அபிவிருத்தி சபைக்கு 03 பிரம்பு இயந்திரங்களை உற்பத்தி செய்வதற்காக செலுத்தப்பட்ட ரூபா 3,850,740 முற்பண தொகைக்கு உரிய 03 இயந்திரங்கள் கிடைக்காதிருக்கும் போது நிதிக் கூற்றுக்களில் நிலையான சொத்தாகவும், அதற்காக ரூபா 384,230 பெறுமானத் தேய்வும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இந்த சொத்துக்கள் இது வரை தேசிய கைப்பணிகள் சபைக்கு வழங்கப்படாமையால் உரிய தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அதன் பிரகாரம் இந்த சொத்துக்கள் நிலையான சொத்துக் கணக்கில் இருந்து அகற்ற வேண்டிய கணக்கில் சீராக்கி 2023 ஆம் ஆண்டின் கணக்குகளில் சரிசெய்யப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (ஊ) | 15 நிலையான சொத்துக்களுக்குரிய பெறுமானத் தேய்வு ஒதுக்கம் ரூபா 399,011 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 இல் சரி செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சரியான பெறுமானத் தேய்வு கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

**1.5.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| | விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | | |
| (அ) | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகணரங்கள் | 208,155,168 | 189,315,144 | 18,840,024 | சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் சரியான | வேறுபாடுகளை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | மீதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கைப்பணிப் பொருள் கண்காட்சி கூடங்களில் இறுதி இருப்பு | 10,672,970 | 14,965,378 | 4,022,408 | சகல கொள்வனவுக ளும் கைப்பணிப் பொருட்களை கொள்வனவு செய்வதன் கீழ் உள்ளடக்கப்பட் டுள்ளது. | வேறுபாடுக ளை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6. பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2014 ஆம் ஆண்டின் போது இலங்கை கைப்பணிகள் சபைக்கு விற்பனை செய்யப்பட்ட பொருட்களுக்காக சபைக்கு கிடைக்க வேண்டிய ரூபா 2,432,122 மீதி மற்றும் சபையால் அந்த நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 84,600 மீதி என்பன நிதிக் கூற்றுக்களில் முன்கொண்டுவரப்பட்டிருந்ததுடன், அந்த மீதிகளை தீர்த்து வைப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் சபை தவறியிருந்தது. | லக்சல நிறுவனத்தில் இருந்து அறவிட வேண்டிய தொகை தொடர்பாக விரிவான கடிதம் ஒன்று 2023.04.10 ஆம் திகதி அனுப்பப்பட்டுள்ளது. செலுத்த வேண்டிய மீதி தொடர்பாக அடுத்து வரும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் ஆலோசனையின் படி நடவடிக்கை எடுக்கப்படும். | கிடைக்க வேண்டிய மீதியை தாமதம் இன்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2021 ஆம் ஆண்டின் சனாதிபதி கைப்பணிக் கண்காட்சிக்காக பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தை ஒதுக்குவதற்கு ரூபா 500,000 முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது, எனினும், 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டிற்காக கைப்பணிக் | 2023 செப்டம்பர் 11 முதல் 18 ஆம் திகதி வரை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்ட சர்வதேச கைப்பணிக் கண்காட்சியின் இட | உரிய பணிகள் நிறைவேற்றப்படாதிருக்குமாயின் குறித்துரைத்த காலப் பகுதியில் வைப்புப் பணத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| கண்காட்சி நடாத்தப்படாதிருந்ததுடன், கணக்காய்வு திகதி வரையிலும் வைப்பு பணத்தை மீள பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வசதிகளை ஒதுக்குவதற்காக இந்த பணத்தை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 9 ஆம் பந்தியில் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 371(5) | செயல்நிமித்த உப கட்டுநிதி விநியோகிக்கப்பட்டதன் பின்னர் உரிய பணிகள் முடிவடைந்து பத்து நாட்களுக்குள் அந்த உப கட்டு நிதி மீண்டும் தீர்க்க வேண்டியிருந்த போதிலும், சபையின் உத்தியோகத்தர்களுக்கு 29 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 1,556,500 பெறுமதியான செயல் நிமித்த உப கட்டு நிதி தாமதமாக தீர்க்கப்பட்டிருந்தது. | தாமதத்தை தவிர்த்து நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்க ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 756 | மீளாய்வாண்டில் தாய்லாந்தில் நடைபெற்ற 67 ஆவது YWCA Diplomatic Charity Bazaar விற்பனை மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டம் 55 ஆவது Diplomatic Red Cross Bazaar சந்தை கண்காட்சிக்காக தேசிய கைப்பணிகள் சபையால் 61.644 கிலோ கிராம் நிறையுடைய நிர்மாண விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதில் எஞ்சிய விடயங்கள் | மிகுதி பொருட்கள் யாவும் தூதுவராளர் அலுவலகத்தால் OTOP CITY – 2022 சந்தை நிகழ்ச்சித் திட்டத்திற்காக அனுப்பப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | மிகுதி பொருட்களை சபைக்கு தாமதமின்றி பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தொடர்பாக மெய்மெய்யாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | | |
| (இ) | 2006 இன் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.8 ஆம் வழிகாட்டி | பிரம்பு இயந்திரத்தை கொள்வனவு செய்யும் ஒப்பந்தம் மற்றும் வராகொட செரமிக் பயிற்சி நிலையத்தின் வாயு சூழைக்காக கோபுரமொன்றை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்திற்காக வழங்குனரிடம் இருந்து செயலாற்றல் காப்புறுதி பெறப்பட்டிருக்கவில்லை. | உரிய செலுத்தலின் போது 10 சதவீத நிறுத்தி வைத்தலுடன் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 7,877,209 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 10,260,754 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 2,383,545 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு மொத்த செலவினம் ரூபா 87,657,168 இனால் குறைவடைந்திருந்த போதிலும், மொத்த வருமானமும் ரூபா 90,040,813 இனால் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செப்பு சுத்திகரிக்கும் திட்டமொன்று இன்றி கொள்வனவு செய்யப்பட்ட செப்பு கிலோ கிராம் 6820 இருப்பில் கிலோ கிராம் 3770 இருப்பு பாதுகாப்பற்று நிலையத்தின் வளவில் குவித்து வைக்கப்பட்டிருந்தது. கடந்த ஆண்டின் போது பாதுகாப்பற்றதாக காணப்பட்ட பெறுமதி ரூபா 1,301,475 ஆன செப்பு கிலோ கிராம் 2086.50 தொலைந்து போயிருந்ததாக புலனாய்வு பிரிவின் அறிக்கையின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. | இந்த செப்புக்கள் கம்பி இருப்பு களஞ்சியத்தில் சராசரியாக அரசாங்க நிறுவனங்களில் காணப்படுகின்ற சகல பாதுகாப்பு தேவைகளையும் பூர்த்தி செய்தே வைக்கப்பட்டுள்ளது. | நட்டத்திற்கு பொறுப்புடைய தரப்பினரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபையால் இன்சியுலேடர் உற்பத்திற்காக கையளிக்கப்பட்ட ஒப்பந்தத்தின் போது ஒப்பந்தகாரரால் சபைக்குரிய வராகொட செரமிக் பயிற்சி நிலையத்தில் இயந்திரம் மற்றும் உபகரணங்கள், மின்சாரம் மற்றும் நீர் பயன்படுத்தி உற்பத்தி நடவடிக்கைககள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், சபையினால் செலவிடப்பட்ட செலவினம் ஒப்பந்தகாரரிடம் இருந்து மீளளிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த நிறுவனம் பயன்படுத்தி இட வசதிகள் மற்றும் இயந்திர பொறிமுறைகளுக்காக கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலையத்தை பயன்படுத்துவதற்காக கட்டணம் அறவிடப்படல் வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கடந்த ஆண்டின் போதும் மீளாய்வாண்டின் போதும் முறையே ரூபா 6,925,622 மற்றும் ரூபா 111,012 செலவில் தயாரிக்கப்பட்டிருந்த தேசிய கைப்பணிகள் சபை இணையதளம் மூலம் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் உற்பத்திகளை இணைவழி முறைமையில் விற்பனை செய்வதற்கு திட்டமிடப்பட்ட போதிலும், 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போது இணைய வழி முறைமையில் மேற்கொள்ளப்பட்ட விற்பனை பெறுமதி ரூபா 61,109 ஆனமையால் அந்த இணைய தளத்தை பயன்படுத்துவது முதல் உச்ச செயற்திறனுடையதாக அவதானிக்கப்படவில்லை. | கைப்பணி இலத்திரனியல் இணையதளம் மூலம் விற்பனை செய்யும் போது எழுந்திருந்த பிரச்சினைகளுக்கான தீர்வு முகப் புத்தகத்தில் அறிவித்து பகிரங்கப்படுத்தி சகல மாகாண உத்தியோகத்தர்களுக்கும் அறிவித்து தேசிய கைப்பணிகள் சபையில் பதிவு செய்துள்ள கைப்பணியாளர்களிடம் இருந்து நிர்மாணங்களை கொள்வனவு செய்யும் குழுவின் மூலம் கொள்வனவு செய்து அந்த வடிவமைப்புக்களை கைப்பணிகளை இணையதளத்திற்காக காட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இணைய தளத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மஹாவலி B செயற்திட்டத்திற்காக 2022 | 2022 ஆம் ஆண்டு மஹாவலி B வலயத்தில் | அரசாங்கத்தின் நிதியை சிக்கனமாக |

| | | | |
|---|---|---|---|
| | ஆம் ஆண்டின் போது ரூபா 34,681,964 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட 44,000 கன்றுகளில் 36,000 கன்றுகள் மாத்திரம் நடப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு திகதி வரையிலும், பயிர்ச் செய்கையில் 95 சதவீதம் அழிவடைவதற்கு காரணமாக செயற்திட்டம் உரிய பிரகாரம் மேற்பார்வை மற்றும் பராமரிப்பு மேற்கொள்ளப்படாமை தோல்வி அடைந்தமைக்கு நேரடியாக தாக்கமளித்தமை அவதானிக்கப்பட்டது. | மேற்கொள்ளப்பட்ட நாற்றுக்களில் இருந்து 95 சதவீதம் அழிவடைந்திருந்தமையால் அந்த நிலத்தில் காட்சிகளை மேவுகை செய்யும் வகையில் பனை அபிவிருத்தி சபையில் இருந்து இலவசமாக கிடைத்த 4,700 பனை விதைகள் இலங்கை இராணுவத்தின் ஊழிய பங்களிப்பு மற்றும் வெலிக்கந்த பிரதேச செயலகத்தின் உதவியுடன் நடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | மிகவும் ஆக்கபூர்வமானதாக முதலீடு செய்தல் வேண்டும். |
| (இ) | சபையினால் 2021 ஆம் ஆண்டின் போது 97 கைப்பணி சமூக அமைப்புக்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும், 2022 ஆம் ஆண்டின் போது ஸ்தாபிக்கப்பட்ட கைப்பணி சமூக அமைப்புக்களின் எண்ணிக்கை 24 ஆகும். அது வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காண்பிக்கப்பட்ட இலக்கு கைப்பணி சமூக அமைப்புக்களின் எண்ணிக்கை 48 சதவீதம் ஆகும். அவை களிமண் கிரவல், பித்தளை வடிவமைப்பு, பனையோலை, குழாய், தென்னை சார்ந்த ஆபரணங்கள், மரத் தளபாடம் மற்றும் அது தொடர்பான துறைகளாக இருந்ததுடன், பிரதான பயிர்ச்செய்கை செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்ட சணல் மற்றும் பிரம்புகளுக்குரிய கைப்பணி மற்றும் சமூக அமைப்புக்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | மூலப் பொருள் காணப்படாமையினால் உள்ளபடியாக தமது சீவனோபாயத்திற்கு ஆபத்துக்கு உட்பட்டுள்ள கைப்பணியாளர்களுக்கு நலன் பெறக்கூடிய வகையில் இந்த பயிர்ச்செய்கை செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. | பிரதான பயிர்ச்செய்கை திட்டத்திற்காக கைப்பணி சமூக அமைப்புக்களை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குரிய ஹெக்டேயர் 1.1165 ஆன ரூபா 47,750,000 பெறுமதியுடைய சீகிரிய பாரம்பரிய கைத்தொழில் கிராம் 2½ வருடங்கள் அளவிலான காலத்தில் இருந்து விளைவற்று காணப்பட்டது. | சீகிரிய கைப்பணிக் கிராமத்தில் கைப்பணி விற்பனைக் கடைகளுக்காக வடிவமைப்புக்களை காட்சிப்படுத்துவதற்கு 12 இராக்கைகளை போக்குவரத்து செய்து விற்பனைசாலையில் பொருத்தப்பட்டிருந்ததுடன், அதற்கு மேலதிகமாக உரிய பெயர்ப் பலகையும் பொருத்தப்பட்டிருந்தது. விற்பனைக்கு தேவையான வடிவமைப்பு இருப்பு தற்போது கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன், கைப்பணி அபிவிருத்தி நிதியத்தை முகாமைத்துவம் செய்து எதிர்காலத்தில் விற்பனைசாலைகளை திறப்பதற்கான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளது. | சொத்துக்களில் இருந்து உச்ச பயன்பாட்டை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | தேசிய கைப்பணிகள் சபைக்குரிய முணியாண்டி குளத்திற்கு அருகில் ஹெல கலா கிராமம் 2021 ஆம் ஆண்டில் ரூபா 10,282,061 மற்றும் 2022 ஆம் ஆண்டில் ரூபா 5,374,639 ஆக கூட்டுப் பெறுமதி ரூபா 15,656,700 செலவில் 14 கொட்டகைகள் நிர்மாணிக்கப்பட்ட போதிலும். கணக்காய்வு திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கிராமத்தை திறந்து வைப்பதற்கு தாமதம் ஏற்படுவதற்கு Adventure Park மற்றும் சுகாதார வசதிகளில் நிர்மாணங்கள் தாமதமடைந்ததன் காரணமாக இந்த கிராமங்களை உள்ளடக்கிய மொத்த செயற்திட்டத்தை திறப்பதற்கு தாமதம் ஏற்பட்டிருந்ததாக நகர பிதாவினால் அறிவிக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (இ) | இந்திய அரசாங்கத்தின் ரூபா 18,432,042 நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் 2016 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட காவன்திஸ்ஸபுர | நாட்டில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் கொவிட் தொற்று நோயின் காரணமாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு | காவன்திஸ்ஸபுர கிராமத்தை பயனுள்ளதாக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| கிராமத்திற்காக சபையால் 2016 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ரூபா 8,744,211 மற்றும் வரித் தொகையாக ரூபா 3,072,000 என்பன செலுத்தப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு திகதி வரையிலும் இந்த கிராமம் விளைவற்று காணப்பட்டது. | சுற்றுலா பிரயாணிகளின் வருகை முழுமையாக வரையறுக்கப்பட்டமையால் மீண்டும் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் கைப்பணியாளர்களை வரவழைத்து விற்பனை கொட்டகைகளை கைப்பணியாளர்களுக்கு வழங்குவதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. | |

## 3.4 செயற்திட்டம் அல்லது செயற்பாடுகளின் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொதியிடப்பட்ட 20 பெட்டிகளில் கிலோ கிராம் 260 நிறையுடைய 93 கைப்பணி வடிவமைப்புக்கள் டுபாய் Expo விற்பனை மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்திற்காக அனுப்பப்பட்டிருந்ததுடன், கைப்பணிப் பொருட்களில் விற்பனை செய்யப்படாத எஞ்சிய இருப்பு விற்பனை கண்காட்சி முடிவடைந்து 08 மாதங்கள் கடந்திருந்த போதும், கைப்பணிகள் சபைக்கு பெற்றுக் கொள்வற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | Expo 2020 கண்காட்சியின் மிகுதி நிர்மாண இருப்புக்கள் இது வரையில் கொழும்பு துறைமுகத்திற்கு வந்துள்ளதுடன், Ceylon Shipping நிறுவனம் ஊடாக விடுவிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | மிகுதி பொருட்களை மன்றத்திற்கு தாமதம் இன்றி பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |